அனுப்புநர்
இணை இயக்குநர் (மாநகராட்சி)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எழிலக இணைவகம்,
சென்னை – 5.

பெறுநர்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.

**<u>ஓ.மு.எண். 40936/2014</u>   <u>நாள்: 23.12.2014</u>**

ஐயா,

பொருள்: மாநகராட்சிகள் – மேயர்களை அழைக்கும் நடைமுறை குறித்து – ஆணைகள் வெளியிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை அரசாணை (நிலை) எண்.157, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 10.12.2014.

----------

பார்வையில் காணும் அரசாணையின் நகல் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

ஓம்/– ஐ.மஹபூபா,
இணை இயக்குநர் (மாநகராட்சி).

**இணைப்பு**: மேற்படி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர். 29/12/2014

24.12.14

7590

3

M3

நகராட்சி நிர்வாக ஆணையரகம்
12 DEC 2014
040936
சேப்பாக்கம், சென்னை-600 005

சுருக்கம்

மாநகராட்சிகள் – மேயர்களை அழைக்கும் நடைமுறை குறித்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண்.157 நாள்: 10.12.2014

படிக்கப்பட்டன:

(1) அரசாணை (நிலை) எண்.262, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.10.1996.

(2) அரசாணை (நிலை) எண்.273, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.10.1996.

Communicate to all corpn commrs at once

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாநகராட்சி மேயர்கள் மற்றும் துணை மேயர்களை அழைப்பது (address) உள்ளிட்ட நடைமுறைகள் மற்றும் பதவிக் காலத்தில் வழங்கப்பட வேண்டிய வசதிகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

**2.** மேற்குறிப்பிடப்பட்ட அரசாணையில், பிற வசதிகள் மற்றும் நடைமுறைகள் தவிர, மாநகராட்சி மேயர் மற்றும் துணை மேயர்களை ''மாண்புமிகு மேயர்'' அல்லது மாண்புமிகு மன்றத் தலைவர் / மன்றத் தலைவி என்றும் ''மாண்புமிகு துணைமேயர்'' / துணைத்தலைவர்/ துணைத் தலைவி என்றும் அழைக்கலாம் என ஆணையிடப்பட்டது.

**3.** மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்குறிப்பிடப்பட்டவாறு மாநகராட்சி மேயர்கள்/ துணைமேயர்களை ''மாண்புமிகு மேயர்'' என்று அழைக்கும் முறையை இரத்து செய்துவிட்டு, பழைய நடைமுறைப்படியே மேயர்களை ''வணக்கத்திற்குரிய மேயர்'' என்று அழைக்க வேண்டும் என ஆணையிடப்பட்டது.

..2..

4. தற்போது, மாநகராட்சி மேயர்களை "வணக்கத்திற்குரிய மேயர்" என அழைக்கும் நடைமுறைக்குப் பதிலாக "மாண்புமிகு மேயர்" (Hon'ble Mayor) என அழைக்கப்படவேண்டும் என்று கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.பணீந்திர ரெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
ஆணையர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகள்.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
முதன்மைச் செயலர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை– 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
10/12/14